சுருக்கம் – தமிழ் மொழிபெயர்ப்பு

# மீள்குடியேற்றக் கொள்கைக் கட்டமைப்பு (RPF)

## கொழும்பு நகர மீளுருவாக்க ஆதரவுத் திட்டம் (SCURP)

### திட்ட விவரம்

போக்குவரத்து, நெடுஞ்சாலைகள் மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சின் (MTH&UD) கீழ் உள்ள நகர அபிவிருத்தி அதிகாரசபையால் (UDA) அமுல்படுத்தப்படும் நகர மீளுருவாக்கல் அபிவிருத்தித் திட்டம் (URP), குறைந்த வசதிகளைக் கொண்ட குடியிருப்புகளில் வாழும் குறைந்த மற்றும் கீழ்-நடுத்தர வருமானம் பெறும் 50,000 குடும்பங்களை உயர்மாடிக் குடியிருப்புகளில் மீள்குடியமர்த்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது. ஆசிய உட்கட்டமைப்பு முதலீட்டு வங்கியின் (AIIB) நிதியுதவியுடன் செயல்படுத்தப்படும் கொழும்பு நகர மீளுருவாக்கல் ஆதரவுத் திட்டம் (SCURP) மூன்று கூறுகளைக் கொண்டுள்ளது. SCURP நிறுவப்பட்டதைத் தொடர்ந்து, இத்திட்டம் 2019 சித்திரை மாதத்தில் ஆரம்பிக்கப்பட்டது; ஆரம்பக் கடன் ஒப்பந்தத்தின்படி இது 2025 ஆனி மாதம் 30 ஆம் திகதிக்குள் நிறைவு செய்யப்பட வேண்டியிருந்தது. பல திட்டக் கூறுகள் மற்றும் கட்டுமான ஒப்பந்தங்களில் ஏற்பட்ட தாமதங்கள் காரணமாக, திட்ட அமுலாக்கக் காலம் பின்னர் 2027 மார்கழி மாதம் 31 ஆம் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளது. கூறு 1 (அமெரிக்க டொலர் 220 மில்லியன்), ஏறத்தாழ 4,500 குடும்பங்களுக்கான வீடமைப்புக் கட்டுமானத்திற்கு நிதியளிக்கிறது. இதன் கீழ், மொத்தம் 4,074 வீட்டு அலகுகளைக் கொண்ட ஆறு அடுக்குமாடிக் குடியிருப்பு வளாகங்களின் கட்டுமானப் பணிகள் நிறைவடையும் கட்டத்தில் உள்ளன. மேலதிக உபதிட்டங்கள், திட்டத் தயாரிப்பின்போது அல்லது திட்டம் அமுலாக்கத்தில் இருக்கும் காலத்தில் அடையாளம் காணப்படும். கூறு 2 (அமெரிக்க டொலர் 50 மில்லியன்), வீடமைப்பு நிகழ்ச்சித்திட்டத்தால் விடுவிக்கப்படும் பகுதிகளின் மீளபிவிருத்தியையும், அப்பகுதிகளில் பொதுவசதிகளை ஏற்படுத்துவதையும் ஆதரிக்கிறது. சாத்தியமான பத்து பகுதிகள் அடையாளம் காணப்பட்டுள்ளன; அவற்றில் பெரும்பாலான மக்கள் ஏற்கனவே இடம்பெயர்ந்துள்ளனர். மேலும், கூறு 1 இன் கீழ் வழங்கப்படும் வீடுகளுக்குக் குடும்பங்கள் இடம்பெயரும் போது விடுவிக்கப்படும் சில பகுதிகளின் மீளபிவிருத்திக்கும் இத்திட்டம் நிதியளிக்கும். கூறு 3 (அமெரிக்க டொலர் 10 மில்லியன்), மேலதிக தொழில்நுட்ப உதவிக்கும் திட்ட முகாமைத்துவத்திற்கும் நிதியளிக்கிறது.

திட்ட அமுலாக்கத்தின்போதும் மீள்குடியமர்த்தல் செயற்றிட்டங்கள் (RAPs) தயாரிக்கப்பட்டபோதும் பெற்ற அனுபவங்களை பிரதிபலிப்பதற்கும், மேலதிகப் பாதுகாப்பு ஏற்பாடுகளை உள்ளடக்குவதற்கும், SCURP இன் தற்போதைய அமுலாக்க ஏற்பாடுகள் மற்றும் AIIB இன் சுற்றுச்சூழல் மற்றும் சமூகத் தரநிலை 2 (ESS2) ஆகியவற்றின் தற்போதைய செயலாக்க ஏற்பாடுகளுடன் கட்டமைப்பைச் சீரமைக்கும் வகையிலும் மீள்குடியேற்றக் கொள்கைக் கட்டமைப்பு (RPF) புதுப்பிக்கப்பட்டுள்ளது. சட்ட மற்றும் கொள்கைக்

கட்டமைப்பைத் தெளிவுபடுத்துதல், உரித்துரிமை அட்டவணையை (EM) மேம்படுத்துதல், உரித்துரிமை மதிப்பீட்டுக் குழு (EAC) மற்றும் மேன்முறையீட்டுக் குழு போன்ற நிறுவனப் பொறிமுறைகளை அறிமுகப்படுத்துதல், வாழ்வாதார மேம்பாட்டு நிகழ்ச்சித்திட்டம் (LDP) மற்றும் பங்குதாரர் ஈடுபாட்டுத் திட்டம் (SEP) ஆகியவற்றைச் சுட்டிக்காட்டுதல், குறைதீர்ப்பு பொறிமுறையை (GRM) வலுப்படுத்துதல், பாதுகாப்பு ஏற்பாடுகளின் அமுலாக்கத்திற்கான நிறுவன ஏற்பாடுகள் குறித்த ஓர் அத்தியாயத்தைச் சேர்த்தல் என்பன இத்திருத்தங்களில் அடங்குகின்றன. 2026 பெப்ரவரி 05 ஆம் திகதிய 26/0268/809/041 ஆம் இலக்க அமைச்சரவைப் பத்திரத்தின் மூலம் அமைச்சரவை வழங்கிய அங்கீகாரத்திற்கு அமைவாக உரித்துரிமை அட்டவணை, உரித்துரிமை மதிப்பீட்டுக் குழு மற்றும் மேன்முறையீட்டுக் குழு ஆகியவை RPF இல் இணைக்கப்பட்டுள்ளன.

## சமூகத் தாக்கங்கள்

கிடைக்கக்கூடிய அரச காணிகளில் புதிய வீட்டு அலகுகளை நிர்மாணிப்பதற்கு UDA தீர்மானித்துள்ளதால், கட்டுமானத்திற்காக அடையாளம் காணப்பட்ட இடங்களில் வசிப்பவர்கள் மற்றும் புதிய வீட்டு வளாகங்கள் கட்டி முடிக்கப்பட்டவுடன் மீள்குடியேற்றப்படவுள்ள பின்தங்கிய குடியிருப்புகளில் வசிப்பவர்களின் மீள்குடியேற்றம் மற்றும் மறுவாழ்வு (R&R) தொடர்பான பிரச்சினைகளே முக்கியமாகக் கவனிக்கப்பட வேண்டியவையாக உள்ளன. முன்மொழியப்பட்ட முதலீடுகளுடன் தொடர்புடைய முக்கிய சமூக அபாயங்களிலும் தாக்கங்களிலும், குறைந்த வசதிகளைக் கொண்ட குடியிருப்புகளில் வாழும் குடும்பங்களின் மீள்குடியமர்த்தல், வருமான ஆதாரங்களை, சமூக மற்றும் இனக் குழுக்களின் இடப்பெயர்வு அல்லது சமூகத் தொடர்புகளின் சீர்குலைவு மற்றும் உயர்மாடிக் குடியிருப்பு வாழ்க்கை பற்றிய பரிச்சயமின்மையால் ஏற்படக்கூடிய பிரச்சினைகள் என்பன அடங்குகின்றன.

## சட்டக் கட்டமைப்பு

முன்மொழியப்பட்ட திட்டத்தின் கீழான அனைத்து நடவடிக்கைகளும் மீள்குடியமர்த்தல் நடவடிக்கைகளுக்குப் பொருந்தும் சட்டங்கள், ஒழுங்குவிதிகள் மற்றும் அறிவித்தல்களுக்கு அமைவாக மேற்கொள்ளப்படும். திட்ட நடவடிக்கைகள் இலங்கையின் சட்ட மற்றும் ஒழுங்குமுறைக் கட்டமைப்புடன் ஒத்திசைவதை உறுதிசெய்வது SCURP இன் திட்ட முகாமைத்துவ அலகின் (PMU) பொறுப்பாகும். அதனுடன், திட்ட நடவடிக்கைகள் AIIB இன் சுற்றுச்சூழல் மற்றும் சமூகக் கொள்கை (ESP) மற்றும் சுற்றுச்சூழல் மற்றும் சமூகத் தரநிலைகள் (ESS) ஆகியவற்றுடனும் இசைவுபடுத்தப்படும்.

## தகுதி அளவுகோல்கள், உரிமைகள் மற்றும் வரையறைகள்

இக் கட்டமைப்பு, கோட்பாடுகளையும் வழிகாட்டுதல்களையும் வகுத்துரைப்பதுடன், தன்னிச்சையற்ற (கட்டாய) மீள்குடியேற்றத் திட்டமிடல் மற்றும் செயல்படுத்தலில் எடுக்கப்பட வேண்டிய முக்கிய நடவடிக்கைகளையும் விரிவாக விளக்குகிறது. உதாரணமாக, உரிமை ஆவணமுள்ளவர்களின் உரித்துரிமைக்கான முடிவுத் திகதி காணி கையகப்படுத்தும் சட்டத்தின் (LAA) கீழ் அறிவித்தல் வெளியிடப்படும் திகதியாகும்; உரிமை ஆவணமற்றவர்களுக்கு தகுதித் திகதியானது மீள்குடியேற்றத் தாக்கக் கணக்கெடுப்பு

நடத்தப்பட்ட திகதியாகவும் தகுதித் திகதிக்குப் பின்னர் குறித்த பகுதியை ஆக்கிரமிக்கும் நபர்கள் இழப்பீடு அல்லது வேறு எந்தவொரு மீள்குடியமர்த்தல் உதவியையும் கோருவதற்குத் தகுதியற்றவர்கள். அதேபோன்று, உரித்துரிமை அட்டவணை இழப்பின் வகைப்பாடு மற்றும் தன்மை என்பவற்றையும், உரித்துரிமைகளைப் பெறத் தகுதியான தரப்புகளையும் விளக்குகிறது. காணி கையகப்படுத்தும் சட்டம் அனைத்து வகையான இழப்புகளையும் உள்ளடக்காததால், அத்தகைய விடயங்களுக்குத் தீர்வு காண இலங்கை அரசாங்கத்தின் தேசிய தன்னிச்சையற்ற மீள்குடியமர்த்தல் கொள்கையும் (NIRP), 2024 ஆம் ஆண்டில் திருத்தப்பட்டு இற்றைப்படுத்தப்பட்ட AIIB இன் ESP மற்றும் ESS ஆகியவற்றின் பொருத்தமான ஏற்பாடுகளும் பயன்படுத்தப்பட்டுள்ளன. திட்ட அமுலாக்கத்தின் விளைவாக ஏற்படும் அனைத்து இழப்புகளுக்கும் இழப்பீடு வழங்கப்படும்.

## கலந்தாலோசனையும் பங்குதாரர் ஈடுபாடும்

பங்குதாரர் கலந்தாலோசனை என்பது திட்டத் தயாரிப்பு மற்றும் அமுலாக்கத்தின் முக்கிய பகுதியாகும். கலந்தாலோசனைகள் செயற்பாட்டுடனான பங்கேற்பை உறுதிப்படுத்துவதோடு, முரண்பாடுகள் உருவாகும் சாத்தியத்தையும் திட்டத் தாமத அபாயத்தையும் குறைக்கும். பாதிக்கப்பட்ட குடும்பங்களின் தேவைகளுக்கும் முன்னுரிமைகளுக்கும் ஏற்ற, விரிவான அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டமாக மறுவாழ்வளித்தல் மற்றும் மீள்குடியமர்த்தல் (R&R) நடவடிக்கைகளையும் வாழ்வாதார மீள்நிலைநாட்டல் நிகழ்ச்சித்திட்டங்களையும் சிறப்பாக வடிவமைக்கவும் பங்குதாரர் கலந்தாலோசனைகள் உதவும். இதன் மூலம் இலங்கை அரசாங்கத்தின் முதலீடுகளால் கிடைக்கும் பொருளாதார மற்றும் சமூக நன்மைகளை அதிகபட்சமாகப் பெற முடியும்.

## மீள்குடியமர்த்தலுக்கு முந்தைய மற்றும் பிந்தைய நிகழ்ச்சித்திட்டங்கள்

இடமாற்றப்படும் குடும்பங்கள் குறைந்த வசதிகளைக் கொண்ட குடியிருப்புகளிலிருந்து வருவதால், அவர்களுக்கு உயர்மாடிக் குடியிருப்பு வாழ்க்கை பற்றிய போதிய புரிதல் இல்லாமல் இருக்கலாம். ஒரு வீட்டு அலகின் உரிமையாளராக அவர்கள் சில உரிமைகளை அனுபவிப்பார்கள்; அதேவேளை, பொதுப் பயன்பாட்டு வசதிகளையும் சேவைகளையும் அயலவர்களுடன் பகிர்ந்துகொள்வார்கள். பொதுவசதிகளைப் பகிர்ந்து பயன்படுத்தும்போது நல்லிணக்கமான உறவுகளை உறுதிசெய்வதற்காக குடியிருப்பாளர்கள் ஒருவருக்கொருவர் சில கடப்பாடுகளையும் கொண்டிருப்பார்கள். எனவே, அமைதியான சகவாழ்வை ஊக்குவிப்பதற்காக UDA, ஆலோசகர்களின் உதவியுடன், சமூக ஒருங்கிணைப்பு, திறன் மேம்பாடு மற்றும் வாழ்வாதார மீள்நிலைநாட்டல் தொடர்பான திட்டமிடல் மற்றும் ஆதரவு நிகழ்ச்சித்திட்டங்களை மேற்கொள்ளும்.

இடமாற்றத்தால் ஏற்படும் மனஅழுத்தம் மற்றும் பொருளாதாரச் சிரமங்களிலிருந்து குடும்பங்கள் மீண்டு, தமது வாழ்க்கையை மீண்டும் நிலைநாட்டுவதற்கு வருமானத்தை மீள்நிலைநாட்டுவதும் வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதும் மிகவும் முக்கியமானவை. இதன் காரணமாக, மீள்குடியமர்த்தல் மூலோபாயத்தின் ஒரு பகுதியாக அமுல்படுத்தப்பட வேண்டிய வருமான மீள்நிலைநாட்டல் நடவடிக்கைகள் உரித்துரிமை அட்டவணையில் உள்ளடக்கப்பட்டுள்ளன. அதற்கமைவாக, பாதிக்கப்பட்ட மக்களின் வருமான

மட்டத்தையும் வாழ்க்கைத் தரத்தையும் உயர்த்துவதற்கான வாய்ப்புகளை மீள்குடியமர்த்தல் செயற்றிட்டங்கள் (RAPs) வழங்கும். தேவையான திறன் பயிற்சிகளை வழங்க அரச நிறுவனங்களும் வெளிப்புற நிறுவனங்களும் பணியமர்த்தப்படும்.

## குறைதீர்ப்பு பொறிமுறை (GRM)

திட்டத்தால் பாதிக்கப்பட்ட நபர்களும் ஏனைய பங்குதாரர்களும் முன்வைக்கும் கரிசனைகளைப் பெற்றுக்கொள்வதற்கும் தீர்ப்பதற்கும் அணுகக்கூடிய, வெளிப்படையான மற்றும் காலவரையறைக்குட்பட்ட செயல்முறையொன்றை வழங்குவதற்காக திட்டம் ஒரு குறைதீர்ப்பு பொறிமுறையை (GRM) நிறுவியுள்ளது. இந்த GRM, தள மட்டத்தில் ஆரம்பித்து, தேவைப்படின் திட்ட மட்டத்திற்கும் அமைச்சு மட்டத்திற்கும் மேலெழுப்பப்படும் மூன்று-நிலை கட்டமைப்பினூடாகச் செயல்படுகிறது. இதன்மூலம், குறைகள் மிகக் கீழ்மட்டத்திலேயே நிவர்த்தி செய்யப்படுவதை உறுதி செய்வதோடு, உயர் மட்ட மறுஆய்வுக்கான வாய்ப்புகளையும் வழங்குகிறது. இப்பொறிமுறை UDA இன் கீழ் உள்ள SCURP திட்ட முகாமைத்துவ அலகால் நிர்வகிக்கப்படுவதுடன், பாதிக்கப்படக்கூடிய குழுக்கள் (நலிவடைந்த குழுக்கள்) உட்பட பாதிக்கப்பட்ட அனைவருக்கும் அணுகக்கூடியதாகும். இடமாற்றத்திற்குப் பின்னர், மீள்குடியமர்த்தல் உறுதிப்பாடுகள், இழப்பீடு, வீட்டு அலகு ஒதுக்கீடு மற்றும் வாழ்வாதார மீள்நிலைநாட்டல் தொடர்பான விடயங்களுக்கு, கூட்டு ஆதன முகாமைத்துவக் கூட்டுத்தாபனங்களிலிருந்து (CMCs) சுயாதீனமாக GRM தொடர்ந்து செயல்படும்; அதேவேளை, கூட்டு ஆதன முகாமைத்துவம் தொடர்பான விடயங்களை CMCs கையாளும். மீள்குடியமர்த்தலுக்குப் பிந்தைய காலத்தில் குடியிருப்பாளர்கள் தொடர்ந்தும் குறைதீர்ப்பு தீர்வைப் பெறுவதை உறுதிசெய்வதற்காக, இடமாற்றத்திற்குப் பின்னர் மூன்று ஆண்டுகள் வரை GRM செயற்பாட்டில் இருக்கும். மூன்றாம் நிலையில் வழங்கப்படும் தீர்ப்பு பாதிக்கப்பட்ட தரப்பினருக்கு ஏற்கத்தக்கதாக இல்லாவிட்டால், புகார்தாரர் இலங்கையின் பொருந்தக்கூடிய சட்டங்களுக்கு இணங்க சட்ட நீதிமன்றங்கள் மூலம் சட்ட நிவாரணம் கோரலாம்.

## பாதுகாப்பு ஏற்பாடுகளை அமுல்படுத்துவதற்கான நிறுவன ஏற்பாடுகள்

திட்டத்தின் கீழ் சுற்றுச்சூழல் மற்றும் சமூகப் பாதுகாப்பு ஏற்பாடுகள், SCURP க்காக நிறுவப்பட்ட திட்ட முகாமைத்துவ அலகின் ஊடாக UDA தலைமையில் ஒருங்கிணைக்கப்பட்ட நிறுவனக் கட்டமைப்பின் கீழ் அமுல்படுத்தப்படும். மீள்குடியமர்த்தல் திட்டமிடல், பங்குதாரர் ஈடுபாடு, வாழ்வாதார மீள்நிலைநாட்டல், குறைதீர்ப்பு, கண்காணிப்பு மற்றும் அறிக்கையிடல் உட்பட பாதுகாப்பு ஏற்பாடுகளின் ஒட்டுமொத்த அமுலாக்கத்திற்கு PMU பொறுப்பாக இருக்கும். போக்குவரத்து, நெடுஞ்சாலைகள் மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சு (MTH&UD), மதிப்பீட்டுத் திணைக்களம், கூட்டு ஆதன முகாமைத்துவ அதிகாரசபை (CMA), தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபை (NHDA), மாநகர சபைகள், பிரதேச செயலகங்கள் மற்றும் வீட்டுத் தொகுதிகளில் நிறுவப்படவுள்ள கூட்டு ஆதன முகாமைத்துவக் கூட்டுத்தாபனங்கள் (CMCs) உள்ளிட்ட தொடர்புடைய அரச நிறுவனங்களுடன் PMU நெருங்கிய ஒருங்கிணைப்புடன் செயற்படும். RAP தயாரிப்பு ஆலோசகர்களின் ஆதரவுடன் PMU இன் சமூகக் குழு, சமூகப் பாதுகாப்பு நடவடிக்கைகளின் அமுலாக்கத்தை மேற்பார்வையிட்டு, RPF மற்றும் பின்னர்

தயாரிக்கப்படும் RAPs ஆகியவற்றின் ஏற்பாடுகளுக்கு இணங்குதல் உறுதிசெய்யப்படுவதை கவனிக்கும். GRM, உரித்துரிமை மதிப்பீட்டுக் குழு மற்றும் மேன்முறையீட்டுக் குழு போன்ற நிறுவனப் பொறிமுறைகள், வெளிப்படையான தீர்மானம் மேற்கொள்ளலுக்கும் இழப்பீடு, வீட்டு அலகு ஒதுக்கீடு மற்றும் மீள்குடியமர்த்தல் உதவி தொடர்பான மனக்குறைகளைத் தீர்ப்பதற்கும் ஆதரவளிக்கும். இந்நிறுவனக் கட்டமைப்பு, திட்ட அமுலாக்கம் முழுவதிலும் தேசிய ஒழுங்குவிதிகளுக்கும் AIIB இன் சுற்றுச்சூழல் மற்றும் சமூகக் கொள்கை மற்றும் தரநிலைகளுக்கும் இணங்குவதை உறுதிப்படுத்துவதுடன், பயனுள்ள ஒருங்கிணைப்பையும் பொறுப்புக்கூறலையும் உறுதிசெய்கிறது.

## கண்காணிப்பும் மதிப்பீடும்

திட்ட அமுலாக்கத்தின்போது கண்காணிப்பு என்பது தொடர்ச்சியான செயல்முறையாகும். திட்டத்தின் உண்மையான முன்னேற்றம், வெற்றிபெறுவதற்கான சாத்தியம் மற்றும் உருவாகும் சிரமங்கள் ஆகியவற்றை அது கண்டறிவதுடன், திட்ட அமுலாக்கத்தில் தேவையான திருத்தங்களை இயன்றவரை விரைவாக மேற்கொள்ளவும் உதவும். கண்காணிப்பு, உள்ளக மற்றும் வெளிப்புற கண்காணிப்புகளை உள்ளடக்கும். அதேபோன்று, குறிப்பிட்ட காலப்பகுதியில் இடமாற்றத்தின் தாக்கத்தையும் மீள்குடியமர்த்தல் நோக்கங்கள் அடையப்பட்டுள்ளனவா என்பதையும் மதிப்பிடும் வகையில் திட்டத்தின் கீழ் மதிப்பீடு மேற்கொள்ளப்படும். அனைத்து மீள்குடியமர்த்தல் நடவடிக்கைகளையும் இடைக்காலத்திலும் திட்ட நிறைவிலும் மதிப்பிடுவதற்காக சுயாதீன மதிப்பீட்டு நிபுணர் ஒருவர் அல்லது நிறுவனம் ஒன்று பணியமர்த்தப்படும்.